தந்திருக்கிறார்கள். அதுதானே தவிர இதைப்பற்றி நன்கு விசாரித்து—அவர்கள் கேட்டார்கள் பொது விசாரணை வேண்டு மென்று—பொது விசாரணை வேண்டுமானால் வைத்துக் கொள் ளுங்கள். இல்லை உரிமைக் குழு மூலம் விசாரிப்பது என்றால் அப்படி வைத்துக் கொள்ளுங்கள், நான் தயாராயிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, முதலில் இங்கே ஒரு உரிமைப் பிரச்னை எழுப்பப்பட்டு அதைத் தொடர்ந்து தன்னிலை விளக்கம் என்னும் முறையில் அதை யொட்டிய கருத்துக்கள் இங்கு பேசப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், உரிமைப் பிரச்னை வேறு. இங்கே முதலில் எழுப்பப்பட்டது உரிமைப் பிரச்னையா என்பதை முதலில் தாங்கள் முடிவு எடுக்க வேண்டும். அப்படித் தாங்கள் முடிவு எடுப்பதாகயிருந்தால் அதற் கான கருத்துக்களை நாங்கள் தெரிவிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால், இப்போது தெரிவிக்க வேண்டும் என்று நான் கருதவில்லை. அதன் அடிப்படையில் நான் மாறுபடுகிறவன். உரிமைப்பிரச்னை எழுப்பக் கூடிய நியாயம் இருக்கிறதா என்ற அடிப்படையை ஆராய்ந்து அதை உரிமைப் பிரச்னையாக எடுத்துக் கொள்ளலாமா என்பதை முடிவு செய்து பின்னர் மற்ற வகைகளில் இங்கு எழுந்த பிற பிரச்னைகளைத் தீர்க்கலாம், என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : பாயின்ட் ஆப் ஆர்டர். நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதா அவர்களும் கொண்டு வந்த உரிமைப் பிரச்னை. . . . .

Mr. SPEAKER : No point of order on this.

5. கவன ஈர்ப்பு.

உளுந்தூர்பேட்டை தாலூக்கா செங்குறிச்சி கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்தினால் ஏற்பட்ட சேதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. வி. துலுக்காணம், திரு. துரை முத்துசாமி ஆகியோர் சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. துரைமுருகன் : நான் ஒரு உரிமைப் பிரச்னை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என் அறையில் வந்து கேளுங்கள்.

TRUTH ALONE TRIUMPHS

திரு. துரைமுருகன்: அவர்கள் கேட்டார்கள், நான் ஏன் கேட்கக் கூடாது? நான் ஒரு.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என் விருப்பம். திரு. துலுக்காணம்.

திரு. வி. துலுக்காணம்: தலைவர் அவர்களே, ''தென்னுற்காடு மாவட்டம், உளுந்தூர்பேட்டை தாலூக்கா, செங்குறிச்சி கிராமத்தில் சமீபத்தில் ஏற்பட்ட தீ விபத்தினல் சுமார் 50 வீடுகளும், உளுந்தூர்பேட்டை டவுனில் ஏற்பட்ட தீ விபத்தினல் சுமார் 5 வீடுகளும் எரிந்து விட்டதில் ரூ. 15,000-க்கு மேல் சேதம் அடைந்துள்ளது பற்றியும் மேலும் அப்பகுதிகளில் தீ விபத்து ஏற்பட்டால் கள்ளக்குறிச்சி, விருத்தாசலம், பண்ருட்டி, விழுப்புரம் ஆகிய இடங்களிலிருந்துதான் தீயணைப்பு வண்டி வரவேண்டிய நிலை இருப்பது பற்றியும்'' உள்ள அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தென்னுற்காடு மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டை நகரில் 2-3-78 அன்று பகல் 2-15 மணிக்கு தீ விபத்து ஏற்பட்டு ஒரு குடிசையின் ஒரு பகுதி மட்டும் எரிந்தது. விருத்தாசலத்திலிருந்து தீயணைப்பு படையினர் வந்து தீயை அணைத்தனர். இந்த விபத்தினல் சேதம் ரூ. 500. இதனல் பாதிக்கப்பட்டவர் ஒரு உயர்நிலைப் பள்ளியில் கடைநிலை ஊழியராகப் பணியாற்றிக் கொண்டு மாதம் ரூ. 100-க்கு மேல் ஊதியம் பெற்றதால் அவர் மான்யத் தொகை ஏதும் பெற தகுதியில்லை.

11-3-78 அன்று பிற்பகல் 4 மணிக்கு உளுந்தூர்ப்பேட்டை வட்டத்தைச் சேர்ந்த செங்குறிச்சி கிராமத்தில் தீ விபத்து ஏற்பட்டு 24 வீடுகள் எரிந்து சாம்பலாயின. விழுப்புரம், விருத்தாசலம், திருக்கோயிலூர் ஆகிய இடங்களிலிருந்து தீயணைப்பு படையினர் வந்து தீயை அணைத்தனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் இலவசமாகக் கொடுக்கப்பட்டன. திருக்கோவிலூர் கோட்டாட்சியாளரும் கோட்ட வளர்ச்சி அதிகாரியும் தீ விபத்து ஏற்பட்ட இடத்தை 13-3-78 அன்று நேரில் பார்வையிட்டனர். மாநில அரசிதழ் பதிவு பெருத அலுவலர்களின் வேலை நிறுத்தத்தின் காரணமாக மான்யத் தொகையை உடனடியாகக் கொடுக்க இயலவில்லை. எனினும் பாதிக்கப்பட்ட 21 நபர்களுக்கு ரூ. 1,680 நிவாரணத் தொகையாக 17-3-78 அன்று வழங்கப்பட்டுள்ளது. இந்த விபத்தினல் ரூ. 18,500 பொருட் சேதம் ஏற்பட்டதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். இந்த இரண்டு தீ விபத்துக்களிலும் உயிர்ச் சேதம் மற்றும் கால்நடைச் சேதம் எதுவுமில்லை. இவ்விரண்டு தீ விபத்துக்களும் தற்செயலாக ஏற்பட்டன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்துள்ளார்.

உளுந்தூர்ப்பேட்டையில் தற்போது தீயணைப்பு நிலையம் இல்லை. தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்த அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட திருத்திய முன்னுரிமைப் பட்டியலில் 41-வது இடத்தில் உளுந்தூர் பேட்டை இடம் வகிக்கிறது. அதனுடைய முறை வரும்பொழுது தீயணைப்பு நிலையம் அங்கு ஏற்படுத்தப்படும்.

திரு. வி. துலுக்காணம்: தலைவர் அவர்களே, உளுந்தூர்ப் பேட்டையைச் சுற்றி 10 மைல் அளவுக்கு சுமார் 200 கிராமங்கள் இருக்கின்றன. இந்தக் கிராமங்களில் பல தடவை தீ விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இளையூர் என்ற கிராமத்தில் தீ விபத்து ஏற்பட்டு லட்சக் கணக்கான ரூபாய் அளவுக்குச் சேதம் ஏற்பட்டது. ஆகவே, உளுந்தூர்ப்பேட்டையில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது அங்கே தீயணைப்பு நிலையம் இல்லாததால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இப்போது முன்னுரிமைப் பட்டியலில் 41-வது இடத்தில் இருப்பதை அவசர நடவடிக்கையாக எடுத்து உளுந்தூர்ப்பேட்டையில் உடனடியாகத் தீயணைப்பு நிலையம் ஏற் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைச் செய்யுமா என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதை யொட்டி 52 இடங்களில் தீயணைப்புநிலையங்கள் ஏற்படுத்தவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு, அதற்கு முன்னுரிமைப் பட்டியலையும் தயாரித்து வைத்திருக்கிறார்கள். முறைப்படி இவற்றை நிறுவு வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்போது இருக்கின்ற 41-வது இடத்திலிருந்து உளுந்தூர்ப் பேட்டையை முன்னுக்குக் கொண்டுவந்தால் முன்னுல் இருக்கின்ற வர்கள் இன்னொரு தீர்மானத்தை 41-வது விதியின்படி இங்கு தர முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. துலுக்காணம்: முதலில் திருக்கோவிலூர் தாலூகா வாக இருந்தபோது 41-வது இடத்தில் இருந்தது. இப்போது உளுந்தூர்ப்பேட்டை தாலூக்கா தனியாக அமைக்கப்பட்ட பின்னுல் இருக்கின்ற முக்கியத்துவத்தை அமைச்சர் அவர்கள் மனதில் கொண்டு அங்கு உடனடியாகத் தீயணைப்பு நிலையம் அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: உளுந்தூர்ப்பேட்டை தாலூகா தலைநகரம் என்பதால் இந்தக் கோரிக்கை கவனிக்கப் படுமா என்று உறுப்பினர் அவர்கள் கேட்கின்றூர்கள். கவனிக்கப் படும்.